காலநடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# மீன்வளம்

மானியக் கோரிக்கை எண் – 7

## அறிவிப்புகள்
## 2015–2016

**கே. ஏ. ஜெயபால்**
மீன்வளத் துறை அமைச்சர்

## 1. மீன்கள் அதிகமாக கிடைக்கும் இடங்கள், வானிலை மற்றும் கடல்நிலை குறித்த விபரங்களை மீனவர்களுக்கு உடனுக்குடன் தெரிவித்திட மின்னணு காட்சிப் பலகைகள் அமைத்தல்.

மீனவர்கள், வாழ்வில் வளம்பெற, அவர்களின் மீன்பிடித் தொழிலில் திறன்பெற, செயற்கை கோள் உதவியுடன் நவீன தகவல் தொடர்பு சாதனம் வழியாக மீன்கள் அதிகம் கிடைக்கும் பகுதிகள், காற்றின் வேகம், கடல் நீரோட்டம், வானிலை மாற்றங்கள், ஆபத்துக் காலங்களில் அபாய எச்சரிக்கை மற்றும் குரல்வழி பல்வேறு தகவல்களை மீனவர்களுக்கு உடனுக்குடன் வழங்கிடல் இன்றியமையாதது.

மத்திய அரசின் இந்திய தேசிய கடல் தகவல் மையம் (Indian National Centre for Ocean Information Services - INCOIS) தமிழ்நாடு அரசு மீன்வளத் துறையுடன்

இணைந்து மேற்காணும் தகவல்களை தமிழ்நாட்டின் பல்வேறு கடலோர பகுதிகளில் உள்ள மீனவர்களும் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டில் 10 மீன் இறங்கு தளங்களில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** மேம்படுத்தப்பட்ட மின்னணு காட்சிப் பலகைகள் நிறுவப்படும்.

**2. கடலில் மீன்பிடிக்கையில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட ஆபத்து கால எச்சரிக்கை விடுக்கும் கருவி 90 விழுக்காடு மானிய விலையில் வழங்குதல்.**

மீனவர்கள் வாழ்வாதாரத்திற்காக கடலுக்குச் செல்லும் போது, அவர்களது உயிருக்கும் உடைமைக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் பலவித அபாயகரமான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். கடல் நடுவே ஆழ்கடலில் ஏற்படும் இத்தகைய ஆபத்தான தருணங்களில், கரையிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் ஆபத்து நிலை குறித்து தகவல் தெரிவிக்க தேவையான தொலைதொடர்பு வசதிகளை உறுதி செய்வதை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**

பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டு படகுகள் அனைத்திற்கும் ஆபத்து கால எச்சரிக்கை விடுக்கும் கருவிகளை (Distress Alert Transmitters) **90** விழுக்காடு மானியத்துடன் **2015–16**ஆம் ஆண்டில் முதற்கட்டமாக **1600** மீன்பிடிக் கலன்களுக்கு **2** கோடியே **60** இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 3. கடல் மீனவர்களுக்கு மாற்றுத் தொழிலாக மிதவைக் கூடுகளில் மீன்வளர்ப்பினை அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் அண்மைக் கடல் பகுதிகளில் மீன்வள ஆதாரங்கள் அளவுக்கு அதிகமாக பிடிக்கப்படுவதால் மீனவர்களுக்கு குறைந்த அளவிலேயே மீன்கள் கிடைக்கிறது. இதனால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதற்கு மாற்றுத் தீர்வாக மீனவர்கள் அண்மைக்கடல் பகுதியில் கூடுகளில் கடல்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்வதனால் அதிக வருவாய் ஈட்டலாம். இதனைக் கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 50 இலட்சம் ரூபாய் செலவில் மீனவர்களின்

வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அண்மைக்கடல் மற்றும் கழிமுகப் பகுதிகளில் மிதவைக் கூடுகளில் மீன்வளர்ப்பினை மாற்று வாழ்வாதாரத் தொழிலாக, முதற்கட்டமாக 10 இடங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

## 4. உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்கு 50 விழுக்காடு மானியத்தில் கண்ணாடி நாரிழையிலான பரிசல்கள் வழங்குதல்.

தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் தற்பொழுது மீனவர்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மூங்கில் பரிசல்களைக் கொண்டு மீன்பிடித்து வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை எதிர்கொண்டு மீன்பிடிக்கச் செல்லவும், மீன்பிடித்து கரைக்குத் திரும்பவும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இப்பரிசல்கள் நீடித்து உழைக்கும் தன்மையற்றதாகவும் உள்ளன. எனவே நீடித்து உழைக்கக்கூடிய கண்ணாடி நாரிழை பரிசல்கள் மற்றும் மீன்பிடிப்பதற்குத் தேவையான வலைகளில் ஒன்றான வீச்சுவலை உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள

மீனவர்களுக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** **50** விழுக்காடு மானியத்தில் ஒரு கோடியே **60** இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 5. மீனவர்கள் ஆபத்து காலங்களில் உயிர்காக்க இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு உயிர்காப்பு மிதவைகள் வழங்குதல்.

பாரம்பரிய மீன்பிடிக்கலன்களில் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுகின்றனர். அவ்வாறான சூழ்நிலைகளில் மீன்பிடிக் கலன்கள் கவிழும் நிலை ஏற்பட்டு மீனவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. மீனவர்கள் தங்களது உயிரினை காத்துக்கொள்ள, மீனவர்களின் நலன் பேணுவதில் எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஒவ்வொரு இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிக்கலனுக்கும், இரண்டு உயிர்காப்பு மிதவைகள் வீதம் 10,000 உயிர்காப்பு மிதவைகள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

## 6. திருநெல்வேலி மாவட்டத்தில் நவீன மீன்வள மாதிரி கிராமத்தை உருவாக்குதல்.

கிராமப்புறங்களிலுள்ள இயற்கை வளங்களை ஒருங்கிணைத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்றிடும் வகையில், பாசனக் குளங்களில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்த்தல், கூண்டுகளில் மீன்குஞ்சு மற்றும் மீன் வளர்த்தல் மற்றும் நவீன மீன் அங்காடி அமைத்தல் போன்ற பல்வேறு மீன்வள தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, தமிழக விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பில் தேவையான பயிற்சிகள் அளித்து முன்னோடி திட்டமாக ஒரு மாதிரி மீன்வள கிராமம் உருவாக்கப்படும்.

இம்மாதிரி கிராமம் திருநெல்வேலி மாவட்டத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** **25** இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

## 7. சென்னை 'மெரினா' கடற்கரையில் "கடல் உயிரின மீன்காட்சியகம்" அமைத்தல்.

உலகிலேயே இரண்டாவது நீளமான "சென்னை மெரினா கடற்கரை" இந்திய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலாத்தளமாக விளங்குகிறது. சென்னை மாநகரத்திற்கு எழில் சேர்க்கும் "மெரினா" கடற்கரையில் மீன்வளத் துறைக்குச் சொந்தமான இடத்தில் நவீன தொழில் நுட்பங்களுடன் உலகத் தரம் வாய்ந்த "கடல் உயிரின மீன்காட்சியகம்" **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தனியார் பங்களிப்புடன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் மூலம் வருவாய் பங்கீடு அடிப்படையில் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**8. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம், காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடியில் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையம் நிறுவுதல்.**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, இணையத்தின் வருவாயினை பெருக்கும் நோக்கத்துடன் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** காஞ்சிபுரம் மாவட்டம், வாணியஞ்சாவடியில், நவீன டீசல் மற்றும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையம் 80 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

## 9. சில்லறை மீன்விற்பனையில் ஈடுபட்டுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கு மீன் ஏற்றிச்செல்லும் வாகனம் வழங்குதல்.

சில்லறை மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் மற்றும் மீனவ மகளிர், உரிய நேரத்தில் எளிதாக மீன்களை எடுத்துச் சென்று விற்பனை செய்து, நல்ல விலை பெறவும், பொதுமக்களுக்கு தரமான மீன்கள் கிடைக்கவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாட்டில் 10 பின்தங்கிய ஒன்றியங்களிலுள்ள, மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு 71 இலட்சம் ரூபாய் செலவில், 10 மீன் ஏற்றிச்செல்லும் நான்கு சக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

## 10. மீன் விற்பனை அங்காடிகளை நவீனப்படுத்துதல்.

நல்ல தரமான மீன்களை நுகர்வோருக்குச் சுகாதாரமான முறையில் கிடைக்கச் செய்வதில் மீன் விற்பனை நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்கள் பிடிக்கப்பட்டதிலிருந்து நுகர்வோரைச் சென்றடையும் வரை, தொடர் சங்கிலி குளிர்காப்பு (Cold Chain) நிலையில் பராமரிக்கப்படும் பொழுது, நுகர்வோர், தரம் வாய்ந்த மீன்களைப் பெறுவதுடன், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு உரிய விலையினைப் பெறவும் இயலும். எனவே, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

தமிழ்நாட்டில் **19** மாவட்டங்களிலுள்ள மீன் விற்பனை மையங்கள் **23** கோடியே **76** இலட்சம் ரூபாய் செலவில் தொடர் சங்கிலி குளிர்காப்பு (Cold Chain) வசதிகளுடன் நவீனப்படுத்தப்படும்.

**கே. ஏ. ஜெயபால்**
மீன்வளத் துறை அமைச்சர்